

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் முதல்வரின் விலையில்லா நோட்டுப் பாடப்புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித், முதன்மைக்கல்வி அலுவலர் பாலு முத்து ஆகியோர் உள்ளனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. மீனவர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101வது பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

### தி.மு.க.வைப் பற்றி விமர்சிக்க

# எடப்பாடி பழனிச்சாமிக்கு தகுதி உள்ளதா?

## சட்டத்துறை அமைச்சர் ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை ஜூன் 11-

புதுக்கோட்டை திருவப்பூர் முத்துமாரியம்மன் கோயில் விமான கும்பாபிஷேக பாலாலய விழாவை தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்து கொண்டு தொடங்கி வைத்தார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் எஸ்.ரகுபதி, தனித்து வருவோம் என்று சொன்னவர்கள் இன்று தனித்து விடப்பட்டுள்ளார்கள், இன்று கூட்டணியின் தயவு இல்லாமல் அவர்கள் ஆட்சியை நடத்த முடியாது என்ற சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். நிச்சயமாக இது நிலைத்திருக்கக்கூடிய ஆட்சியாக இருக்காது என்பது அரசியல் வல்லுனர்களுடைய கருத்தாக அமைந்திருக்கிறது.

இந்தியா கூட்டணிக்குக் கிடைத்திருக்கிற வெற்றி என்பது மகத்தான வெற்றி. நானூறு இடங்களுக்கு வருவோம் என்று சொன்னவர்கள் 234 இடங்களுக்குள் தான் பெற்றுள்ளனர். ஆனால் எங்களது கூட்



டணி சிறப்பாக எதிர்க்கட்சியாக பணியாற்றக்கூடிய அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது. அதனால் இந்தியா கூட்டணி இந்த வெற்றியைக் கொண்டாடுவதில் எந்த ஒரு தவறும் கிடையாது. அது மகிழ்ச்சியான ஒன்றுதான் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எங்களது தமிழ்நாடு முதலமைச்சர் 40க்கு 40 என்ற முழக்கத்தோடு தேர்தல் களத்தை ஆரம்பித்து 40க்கு 40 என்ற சபதத்தை தமிழ்நாட்டில் நாங்கள் நிறைவேற்றி உள்ளோம்.

**பொறுத்திருந்து பார்ப்போம்!**

எடப்பாடி பழனிச்சாமி அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர். ஆனால் அந்தக் கட்சிக்குள் என்னென்ன நடக்கிறது என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். நாங்கள் அ.தி.மு.கவை பற்றி விமர்சிக்கவில்லை. ஆனால் தி.மு.க.வை பற்றி பேசுவதற்கு எடப்பாடிக்கு என்ன தகுதி இருக்கிறது. தி.மு.க.வைப் பற்றியும் தமிழ்நாடு முதலமைச்சர் பற்றியும் விமர்சிப்பதற்கு எடப்பாடி பழனிச்சாமிக்கு தகுதி இருக்கிறது என்றால் அ.தி.மு.க. பற்றி பேசுவதற்கு ரகுபதிக்கு நிச்சயம் தகுதி உண்டு.

அ.தி.மு.க.வில் என்னென்ன கூத்துக்கள் நடக்கப் போகிறது என்னென்ன புரட்சி வெடிக்கப் போகிறது என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

தமிழிசை சொன்ன குற்றச்சாட்டை தான் நாங்கள் ஏற்கனவே சொல்லி உள்ளோம். குற்றவாளிகளை பா.ஜ.க. சேர்த்து வருகிறது என்பதை நாங்கள் ஏற்கனவே கூறி வருகிறோம். அதற்கு இன்று தமிழிசை ஒப்புதல் அளித்துள்ளார்.

பா.ஜ.க.வுக்குக் கிடைத்துள்ள வாக்கு வங்கி பா.ம.க. மற்றும் அதன் தோழமைக் கட்சிகளைச் சேர்த்து வாங்கியுள்ள வாக்கு வங்கி தானே தவிர பா.ஜ.க. தனித்து வாங்கிய வாக்குகளாக நாங்கள் கருத வில்லை.

எங்களுடைய வாக்கு வங்கி என்றைக்குமே குறைவாகாது. எங்களை பொறுத்தவரை வாக்குகள் சிதறி இருக்கின்றனவே தவிர நிச்சயமாக தி.மு.க. கடந்த முறை வாங்கிய வாக்குகளை தான் வாங்கி உள்ளோம். கடந்த முறை 24 இடங்களில் நின்றோம் இந்த முறை 22 இடங்களில் நின்றுள்ளோம். அதனால் அந்த சதவீதத்தை கணக்கிட்டுள்ளனர். அதனால் எங்களது கூட்டணி எப்போதும் பெற்றுள்ள வாக்குகளை நாங்கள் பெற்றுள்ளோம்.

தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அமைச்சர்கள் ஒதுக்கப்பட்டால் வரவேற்போம். அப்படி வரக்கூடியவர்களால் தமிழ்நாட்டிற்கு நல்லது கிடைக்கும் என்ற நல்லெண்ணத்தோடு வரவேற்போம்

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

# 'நான் முதல்வன்': இளைய தலைமுறையின் வருங்காலம் சிறக்கட்டும்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜூன் 11-

'நான் முதல்வன்' திட்டத்தால் இளைய தலைமுறையின் வருங்காலம் சிறக்கட்டும் என்று 'தினகரன்' தலையங்கத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து 10.6.2024 தேதிய தினகரன் தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாட்டு இளைஞர்கள் கல்வியில், அறிவில், தனித்திறமைகளில் தலைநிமிர்ந்து நிற்க உருவாக்கப்பட்ட திட்டமே 'நான் முதல்வன்' திட்டம். தமிழ்நாட்டில் பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் மற்றும் இளைஞர்கள் படிப்பில் மட்டுமல்லாது, வாழ்க்கையிலும் வெற்றியாளர்களாக திகழ இத்திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ் மாணவ, மாணவிகளின் தனித்திறமைகள் அடையாளம் காணப்பட்டு, அடுத்து அவர்கள் என்ன படிக்கலாம், எப்படி படிக்கலாம் என்கிற வழிகாட்டுதலோடு, சிறப்பு பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் நேர்முக தேர்வுக்கும் அவர்களை தயார்படுத்தி வருகின்றனர்.

தமிழக இளைஞர்களுக்கு வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப பாடத்திட்டத்துடன் கூடிய



தினகரன்

ஜூன் 10, 2024 திங்கட்கிழமை

வருங்காலம் சிறக்கட்டும்

தமிழ்நாட்டு இளைஞர்கள் கல்வியில், அறிவில், தனித்திறமைகளில் தலைநிமிர்ந்து நிற்க உருவாக்கப்பட்ட திட்டமே 'நான் முதல்வன்' திட்டம். தமிழ்நாட்டில் பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் மற்றும் இளைஞர்கள் படிப்பில் மட்டுமல்லாது, வாழ்க்கையிலும் வெற்றியாளர்களாக திகழ இத்திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ் மாணவ, மாணவிகளின் தனித்திறமைகள் அடையாளம் காணப்பட்டு, அடுத்து அவர்கள் என்ன படிக்கலாம், எப்படி படிக்கலாம் என்கிற வழிகாட்டுதலோடு, சிறப்பு பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் நேர்முக தேர்வுக்கும் அவர்களை தயார்படுத்தி வருகின்றனர்.

தனிப்பயிற்சிகள், இலவச திறன் பயிற்சிகள், போட்டி தேர்வுகளுக்கான பயிற்சிகள், ஆளுமை திறன் மற்றும் பன்மொழி பயிற்சிகள், உயர்கல்விக்கான நுழைவுத் தேர்வு பயிற்சி உள்ளிட்டவை இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், பிரிட்டிஷ் கவுன்சிலுடன் மாணவர்களின் திறன் மேம்பாட்டுக்கு ஒரு ஒப்பந்தம் செய்துள்ளது. அதன்படி லண்டனில் நியூ கேஸ்டல் பல்கலைக்கழகத்தில் செயற்கை நுண்ணறிவு, தரவு அறிவியல் ஆகிய பாடப்பிரிவுகளில் ஒருவார சிறப்பு திறன் மேம்பாடு பயிற்சி தமிழ்நாட்டு மாணவ, மாணவிகளுக்கு அளிக்கப்பட உள்ளது. இதற்காக கல்லூரி மாணவ, மாணவிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, திறனாய்வு தேர்வு நடத்தி, 100 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அந்த மாணவர்களுக்கு ஆன்லைன் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அதில் சிறப்பாக செயல்பட்ட 25 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

தேர்வு செய்யப்பட்ட மாணவர்களோடு, 2 பேராசிரியர்களும் பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம் மூலம் லண்டனுக்கு நேற்று புறப்பட்டுச் சென்றனர். லண்டன் சென்றுள்ள மாணவ, மாணவிகளுக்கு வரும் 16ம் தேதி வரை அங்கு சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளன. படிக்கும் காலத்திலேயே லண்டன் சென்று பயிற்சி பெறும் வசதிகள் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் கிடைத்துள்ளதால் மாணவ, மாணவிகள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

தமிழ்நாட்டின் கடந்த காலங்களையும் இப்போது தான் நினைத்து பார்க்க வேண்டும். அப்போதெல்லாம் டி.என்.பி.எஸ்.சி. தேர்வுகள் குறித்து கூட மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு இருந்ததில்லை. அதற்கு எப்படி படிக்க வேண்டும், விண்ணப்பிப்பது எப்படி என பல மாணவர்கள் திகைத்து திண்டாடிய காலங்கள் உண்டு. அரசு தேர்வுகளுக்குரிய புத்தகங்களை வாங்க முடியாமலும், பொது நூலகங்களில் சென்று அவற்றை நோட்டுக்களில் எழுதி மாணவர்கள் படித்த காலங்களும் உண்டு. நவீன விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப இன்று மாணவர்களின் அறிவும், திறமைகளும் விசாலப்பட்டு கொண்டே செல்கின்றன.

திராவிட மாடல் ஆட்சியில் மாணவ, மாணவிகளின் தனித்திறமைகளை கண்டறிந்து, அவற்றை ஊக்குவிக்க அரசே முன்வருகிறது. திறனாய்வு தேர்வுகள் வாயிலாக திறமையுள்ள மாணவர்களை கண்டறிந்து வெளிநாடுகளுக்கு அனுப்பவும், உலகளாவிய தொழில்நுட்பங்களை தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து சேர்க்கவும் 'நான் முதல்வன்' திட்டம் கைக்கொடுக்கிறது. வேலைவாய்ப்பு குறித்த சிறப்பு பயிற்சிகள், மாணவர்களுக்கு படித்தவுடன் வேலை என்கிற இலக்கை நோக்கி பயணிக்க வைக்கிறது. குடத்திலிட்ட விளக்குகளை, ஊருக்கே தெரிகிற வகையில் ஒளிவீச வைக்க இத்தகைய திட்டங்கள் பயன்படுகின்றன. அந்த வகையில் இளைய தலைமுறையினரின் வருங்காலம் சிறக்கட்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# முன்னாள் முதல்வர் ஆர்.வீ. ஜானகிராமன் நினைவு நாள்!

## இரா. சிவா தலைமையில் தி.மு.க.வினர் நினைவஞ்சலி!

புதுவை, ஜூன் 11 -

புதுச்சேரி மாநில முன்னாள் முதல்வர் ஆர்.வீ. ஜானகிராமன் அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. ஆம்பூர் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் அலங்கரித்து வைக்கப்பட்ட ஜானகிராமன் திருவுருவப் படத்திற்கு தி.மு.க. அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தலைமையில் தி.மு.க.-வினர் மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து நெல்லித்தோப்பு தொகுதி செயலாளர் செ. நடராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் சார்பில், சாரம் - லெனின் வீதி சந்திப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா மலரஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து பெண்களுக்கு புடவைகள், ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகளில், அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், துணை அமைப்பாளர் வி.அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ., துணை அமைப்பாளர் அ.தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி, ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப.காந்தி, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். கோபால், பா.செ. சக்திவேல், வெ. ராமசாமி, அமுதாகுமார், நர்கீஸ் மற்றும் தொகுதி செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், தொண்டர்கள் பங்கேற்று நினைவஞ்சலி செலுத்தினார்கள்.



புதுச்சேரி மாநில முன்னாள் முதல்வர் ஆர்.வீ.ஜானகிராமன் அவர்களின் 5–ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. ஆம்பூர் சாலையில் உள்ளது அவரது இல்லத்தில் அலங்கரித்து வைக்கப்பட்ட ஜானகிராமன் திருவுருவப் படத்திற்கு திமுக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தலைமையில் தி.மு.க.வினர் மலரஞ்சலி செலுத்தினர்.

### உடல் உறுப்பு தானத்தில் முதலிடம்!

# தமிழ்நாடு மனிதாபிமானமிக்க கருணை மாநிலம்!

## 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் பெருமிதம்!

சென்னை, ஜூன் 11-

உடல் உறுப்பு தானத்தில் முதலிடம் பெற்றுள்ள தமிழ்நாடு மனிதாபிமானமிக்க கருணை மாநிலமாக திகழ்கிறது என்று 'தினத்தந்தி' தலையங்கத்தில் பெருமையுடன் கூறியுள்ளது.

இதுகுறித்து 10.6.2024 தேதிய 'தினத்தந்தி' தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

தானத்தில் சிறந்த தானம் அன்னதானம்' என்பார்கள். அதாவது, அடுத்தவர் வயிற்று பசியாற்றுவதுதான் அந்த காலங்களில் சிறந்த தானமாக கருதப்பட்டது. ஆனால், இப்போது அடுத்தவர் உயிரைக்காப்பாற்றும் ரத்த தானம், உடல் உறுப்பு தானம் ஆகியவையே எல்லா தானங்களிலும் சிறந்த தானமாக விளங்குகிறது. ஒருவருடைய உறுப்பு, குறிப்பாக இதயம் பழுதுபட்டு செயலிழந்த நிலையில், மரணத்தின் பக்கம் நெருங்கும்போது, அவருக்கு உடல் உறுப்பு மாற்று சிகிச்சை மூலம் உயிர் கொடுக்கப்படுகிறது.

இந்த உடல் உறுப்பு மாற்று சிகிச்சையின் முன்னோடியாக தமிழ்நாட்டில் கண் தானம் தொடங்கியது. கண் தானத்தின் மூலம் இறந்தவர்களின் கண்கள் மீண்டும் இந்த உலகை பார்த்துக்கொண்டிருக்க முடியும். அதுபோல, பார்வையிழந்தவர்களுக்கும் பார்வை கொடுத்து புது வாழ்வு கொடுக்க முடியும்.

கண் தானத்தை தொடர்ந்து மூளைச்சாவு அடைந்தவர்களின் இதயம், கை, கால், நுரையீரல், கணையம், சிறுநீரகம், தோல், எலும்பு, சிறுகுடல் ஆகியவற்றை தானமாக பெற்று, அந்த உறுப்புகள் செயலிழப்பால் உயிருக்கு போராடிக்கொண்டிருக்கும் மற்றவர்களுக்கு பொருத்தி, அவர்களுக்கு புதிய உயிர் வழங்குவதுதான் உடல் உறுப்பு தானமாகும். இந்த உடல் உறுப்பு தானம் செய்வதற்கான ஒழுங்குமுறை சட்டம் 1994ல் ஜெயலலிதா ஆட்சியில்

கொண்டுவரப்பட்டது. அதை மேலும் வலுப்படுத்தவும், முறைகேடுகள் நடக்காமல் தடுக்கவும் உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு மூளைச்சாவு சான்றிதழ் கட்டாயம் என்று கலைஞர் கருணாநிதி 2008ல் சட்டம் கொண்டுவந்தார். இந்த இரு சட்டங்களையும் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடுதான் கொண்டுவந்தது.

இந்த சட்டங்கள் கொண்டு வந்தபிறகு, தமிழ்நாட்டில் உடல் உறுப்புதான விழிப்பு



தலையங்கம்

தினத்தந்தி

10.6.2024 (திங்கட்கிழமை)

உடல் உறுப்பு தானத்தில் தமிழ்நாடு முதலிடம்!

ணர்வு அதிகரித்து, உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்தது. மூளைச்சாவு அடைந்தவரிடம் இருந்து உடல் உறுப்புக்களைப் பெற்று அதை தேவைப்படுபவருக்கு பொருத்த, மற்றொரு மருத்துவமனைக்கு ஆம்புலன்சு மூலம் குறிப்பிட்ட நேரத்திற்குள் கொண்டு செல்ல, போக்குவரத்தை நிறுத்தி எல்லா சிக்னல்களிலும் பச்சை விளக்கு எரிய செய்யும் வகையிலான நடைமுறையையும் தமிழ்நாடுதான் முதலில் கொண்டுவந்தது.

உடல் உறுப்பு தானத்தை ஊக்கப்படுத்தவும் தானம் செய்தவர் உடலுக்கு அரசு மரியாதை செய்யவும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் 2023ம் ஆண்டு செப்டம்பர் 23ந்தேதி ஒரு உத்தரவைப்பிறப்பித்தார். அதன்படி, உடல் உறுப்பு தானம் செய்தவர்கள் உடலுக்கு அரசு மரியாதையுடன் இறுதி சடங்குகள் செய்யப்படும். அமைச்சர்கள், மாவட்ட கலெக்டர்கள், உயர் அதிகாரிகளில் யாராவது ஒருவர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவார்கள் என்று உத்தரவிடப்பட்டது. இந்த அறிவிப்புக்கு பிறகு உடல் உறுப்பு தானத்தில் நல்ல விழிப்புணர்வும் ஊக்கமும் ஏற்பட்டது. 2020ம் ஆண்டு 55 பேர் உடல் உறுப்பு தானம் செய்த நிலையில் இருந்து, ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து இது வரை 575 பேரின் உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டு, அவர்களின் உறுப்புகள் 2,189 பேருக்கு பொருத்தப்பட்டு உயிர்காக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் உடல் உறுப்பு தானத்தில் முதல் இடத்தில் இருக்கிறது என்று மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், துறையின் முதன்மைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி ஆகியோர் பெருமிதத்துடன் கூறினார்கள். உடல் உறுப்பு தானத்தில் தேசிய சராசரியைவிட 7 மடங்கு அதிகமாக பதிவாகி தமிழ்நாடு மனிதாபிமானமிக்க கருணை மாநிலம் என்பதை எடுத்துக்காட்டிவிட்டது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



திருப்பத்தூர் நகரத்தில் உள்ள மீனாட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் புத்தகம் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் ஏ.நல்லதம்பி எம்.எல்.ஏ. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவிகளுக்கு புத்தகங்களை வழங்கினார். பெற்றோர் – ஆசிரியர் கழகத் தலைவர் எஸ்.ராஜேந்திரன் தலைமையில் முதன்மைக்கல்வி அலுவலர் கே.முனிசுப்பராயன், பள்ளி தலைமை ஆசிரியர் டி.செலீன்ஏஞ்சல்மேரி முன்னிலை வகித்தனர். நகர சேர்மென் வி.சங்கீதா வெங்கடேஷ், துணைச் சேர்மென் சபியுல்லா, முன்னாள் சேர்மென் எஸ்.அரசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சிங்கார இரத்தினசபாபதி

**ஜூன் 11 (2020)**



தொ.மு.ச. பேரவையில் இணைப் பொதுச்செயலாளர், பொருளாளர் – தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் ஆகிய பொறுப்பு வகித்ததோடு, மின்கழக தொ.மு.ச. தலைவராக – பொதுச்செயலாளராகவும் பொறுப்பு வகித்து, மின் வாரிய தொழிலாளர்களுக்காக பாடுபட்டவர்.

கழக ஆட்சியில், மின் ஊழியர்களுக்கு முதல்முறையாக ஊதிய உயர்வு – அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் பெற்றுத் தந்தோடு, ஆயிரக்கணக்கான ஒப்பந்த ஊழியர்களுக்கு பணி நிரந்தரம் பெற்றுத் தந்தார். அ.தி.மு.க. ஆட்சியில் ஊழியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை கண்டித்துப் போராட்டங்கள் நடத்தியதோடு, 2.57 சதவீத ஊதிய உயர்வை போராடிப் பெற்றுக் கொடுத்தது என மின்வாரிய ஊழியர்களின் நலன்களுக்காகவும் – உரிமைகளுக்காவும் தொடர்ந்து குரல் கொடுத்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் பேராசிரியர் பெருந்தகையின் பேரன்பையும் பாசத்தையும் பெற்றதோடு, தலைமைக் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் – மாநாடுகளிலும் மின்கழக தொ.மு.ச.வினரை பெருந்திரளாக பங்கேற்க வைத்து, கழகத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**